இனிமையான குழந்தைகளே! நீங்கள் விகர்மங்களின் தண்டனைகளிலிருந்து விடுபடுவதற்கான முயற்சி செய்ய வேண்டும். இந்த கடைசி பிறவியில் அனைத்து கணக்கு வழக்குகளையும் முடித்து விட்டு தூய்மையாக மாற வேண்டும்.

கேள்வி: ஏமாற்றுப்பேர்வழியான மாயை எந்த உறுதி மொழியைத் தகர்ப்பதற்காக ம்யற்சி செய்கிறது?

பதில்: எந்த ஒரு தேகதாரியிடமும் (மனிதனிடமும்) நாங்கள் மனதை வைக்க மாட்டோம் என நீங்கள் உறுதி எடுக்கிறீர்கள். ஒரு தந்தையை மட்டுமே நினைப்போம், தன்னுடைய தேகத்தையும் நினைக்க மாட்டோம் என ஆத்மா கூறுகிறது. பாபா தேகம் உட்பட அனைத்தையும் சன்னியாசம் செய்ய வைக்கிறார். ஆனால் மாயை இந்த உறுதி மொழியை மீறவைக்கிறது. தேகத்தின் மீது பற்று ஏற்பட்டுவிடுகிறது. யார் உறுதி மொழியை மீறுகிறார்களோ அவர்கள் நிறைய தண்டனையும் அடைய வேண்டியிருக்கிறது.

பாடல்: தாயும் நீயே, தந்தையும் நீயே...........

ஓம் சாந்தி. உயர்ந்ததிலும் உயர்ந்த பகவானுக்கு மகிமையும் செய்யபட்டிருக்கிறது. பிறகு நிந்தனையும் செய்யப்பட்டுள்ளது. இப்போது உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை அவரே வந்து அறிமுகத்தைக் கொடுக்கிறார். இராவண ராஜ்யம் ஆரம்பம் ஆகும் போது தன்னுடைய மேன்மை யைக் காட்டுகிறார்கள். பக்தி மார்க்கத்தில் பக்தியின் ராஜ்யம் நடக்கிறது. ஆகவே இராவண ராஜ்யம் எனப்படுகிறது. அது இராம இராஜ்யம். இது இராவண ராஜ்யம். இராமர் மற்றும் இராவணனை இணைக்கின்றனர். மற்றபடி அந்த இராமரோ திரேதாயுகத்தின் ராஜா ஆவார். அவருக்குக் கூற முடியாது. இராவணன் அரை கல்பத்தின் ராஜா, இராமர் அரை கல்பத்தின் ராஜா என்று கூற முடியாது. இது விளக்கமாகப் புரிந்துக் கொள்ள வேண்டிய விஷயம் ஆகும். மற்றபடி புரிய வைப்பதற்கு மிகவும் எளிதான விஷயம் ஆகும். நாம் அனைவரும் சகோதரர்கள். நம் அனைவருக்கும் தந்தை ஒரேயொரு நிராகாரரே. இச்சமயம் தனது குழந்தைகள் அனைவரும் இராவணனின் ஜெயிலில் சிறையில் இருக்கிறார்கள் என பாபாவிற்குத் தெரியும். காமச் சிதையில் அமர்ந்து அனைவரும் கருப்பாகி விட்டனர். இது பாபாவிற்குத் தெரியும். ஆத்மாவில் தான் அனைத்து ஞானமும் இருக்கிறது இல்லையா? இதிலும் அனைத்தையும் விட அதிகமான மகத்துவம் ஆத்மா மற்றும் பரமாத்மா பற்றி தெரிந்து கொள்வதற்கு கொடுக்க வேண்டும். சிறிய ஆத்மாவில் எவ்வளவு நடிப்பு நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அது நடித்துக் கொண்டே இருக்கிறது. தேக உணர்வில் வந்து நடிக்கும் போது சுய தர்மத்தை மறந்து போகிறார்கள். இப்போது பாபா வந்து ஆத்ம அபிமானியாக மாற்றுகிறார். ஏனென்றால் நாம் தூய்மையாக மாற வேண்டும் என்று ஆத்மா தான் கூறுகிறது. என்னை மட்டும் நினையுங்கள் என பாபா கூறுகின்றார். ஓ, பரம்பிதா, ஓ பதீத பாவனா ஆத்மாக்களாகிய நாங்கள் அழுக்காகி விட்டோம், எங்களை வந்து தூய்மையாக மாற்றுங்கள் என ஆத்மா தான் அழைக்கிறது. சம்ஸ்காரங்கள் அனைத்தும் ஆத்மாவில் இருக்கிறது அல்லவா? நாம் பதீதமாகி விட்டோம் என ஆத்மா தெளிவாகக் கூறுகிறது. யார் விகாரத்தில் ஈடுபடுகிறார்களோ அவர்களுக்கு பதீதமானவர் என்று பெயர்.

பதீதமான மனிதர்கள் பரிசுத்தமான நிர்விகாரி தேவதைகளுக்கு முன்பு சென்று கோவில்களில் அவர்களின் மகிமைகளைப் பாடுகிறார்கள். குழந்தைகளே! நீங்கள் தான் பூஜைக்குரிய தேவதைகள் என பாபா புரிய வைக்கிறார். 84 பிறவிகள் எடுத்து நிச்சயமாக கீழே இறங்க வேண்டும். இந்த விளையாட்டு பதீதத் திலிருந்து பாவனமாகவும், பாவன நிலையிலிருந்து பதீதமாக மாறுவதற்கான விளையாட்டாகும். அனைத்து ஞானத்தையும் தந்தை வந்து சைகையினால் புரிய வைக்கிறார். இப்போது அனைவருக்கும் கடைசி பிறவியாகும். அனைவரும் கணக்கு வழக்குகளை முடிக்க வேண்டும். பாபா காட்சிகள் காண்பிப்பார். பதீதமானவர்கள் தனது விகர்மங்களின் தண்டனையை நிச்சயமாக அனுபவிக்க வேண்டும். கடைசியில் ஒரு பிறவி கொடுத்தாவது தண்டனையை வழங்குவார். மனித உடலில் தான் தண்டனை அடைவார்கள். ஆகவே, சரீரத்தை நிச்சயமாக எடுக்க வேண்டும். நாம் தண்டனை அடைந்துக் கொண்டிருக்கிறோம் என ஆத்மா உணர்கிறது. காசியில் கிணற்றில் விழுந்து இறந்து தண்டனை அனுபவிக்கும் போது செய்த பாவங்கள் எல்லாம் காட்சிகளாகத் தெரிகிறது. அப்போது பகவானே மன்னியுங்கள், நாங்கள் மீண்டும் இவ்வாறு செய்ய மாட்டோம் என கூறுகிறார்கள். காட்சிகள் (மனக் கண்ணாடியில்) கிடைக்கும் போது தான் இவ்வாறெல்லாம் மன்னிப்பு கேட்கிறார்கள். உணர்கிறார்கள். துக்கத்தை அனுபவிக்கிறார்கள். ஆத்மா மற்றும் பரமாத்மாவிற்குத் தான் முழு நாடகத்திலும் மகத்துவம் இருக்கிறது. அவர்களை வேறு யாரும் அறியவில்லை. ஆத்மா என்றால் என்ன? பரமாத்மா என்றால் என்ன? என்பது ஒரு மனிதருக்குக் கூட தெரியவில்லை. நாடகத்தின் படி இவ்வாறு நடக்க வேண்டும், குழந்தைகளாகிய உங்களுக்குக் கூட இது ஒன்றும் புதியதில்லை. போன கல்பத்தில் நடந்தது தான் என்ற ஞானம் இருக்கிறது. ஞானம், பக்தி, வைராக்கியம் என்று கூறுகிறார்கள். ஆனால் அர்த்தத்தைப் புரிந்துக் கொள்வ தில்லை. பாபா இந்த சாதுக்களின் தொடர்பில் நிறைய இருந்திருக்கிறார். பெயர் மட்டும் எடுக்கிறார் கள். நாம் பழைய உலகத்திலிருந்து புதிய உலகத்திற்குச் செல்கிறோம் என்றால், பழைய உலகத் தின் மீது நிச்சயம் வைராக்கியம் வர வேண்டும் என இப்போது குழந்தைகளாகிய நீங்கள் நன்கு புரிந்துக் கொள்கிறீர்கள். இதன் மீது ஏன் பற்று வைக்க வேண்டும்? எந்த ஒரு தேகதாரியின் மீதும் பற்று வைக்கக் கூடாது என நீங்கள் உறுதி எடுத்து விட்டீர்கள். நாம் ஒரு தந்தையைத் தான் நினைப்போம் என ஆத்மா கூறுகிறது. நம்முடைய தேகத்தைக் கூட நினைக்க மாட்டோம். பாபா தேகம் உட்பட அனைத்தையும் சன்னியாசம் செய்ய வைக்கிறார். பிறகு மற்றவர்களின் தேகத்தின் மீது நாம் ஏன் பற்று வைக்க வேண்டும்? யார் மீதாவது பற்றிருந்தால் அவர்களின் ஞாபகம் வந்துக் கொண்டே இருக்கும். பிறகு ஈஸ்வரின் ஞாபகம் வராது. உறுதி மொழியை மீறிவிட்டால் தண்டனைகள் நிறைய அடைய வேண்டியிருக்கும். பதவியும் குறைந்து போகும். ஆகையால் எவ்வளவு முடியுமோ பாபாவைத்தான் நினைக்க வேண்டும். மாயை மிகவும் ஏமாற்றக் கூடியது. எந்த நிலையிலும் மாயாவிடமிருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டும். தேக உணர்வு மிகக் கடுமையான நோயாகும். இப்போது ஆத்மா உணர்வுடையவராக ஆகுங்கள் என பாபா கூறுகின்றார். பாபாவை நினைத்தால் தேக உணர்வு என்ற நோய் விலகி விடும். முழு நாளும் தேக உணர்வில் இருக்கிறார்கள். பாபாவை மிகவும் கஷ்டப்பட்டு நினைக்கிறார்கள். பிரிய தர்ஷன், பிரிய தர்ஷினி வேலை செய்துக் கொண்டிருந்தாலும் தனது பிரிய தர்ஷனை நினைத்துக் கொண்டிருப்பது போல கைகள் வேலை செய்துக்

கொண்டிருந்தாலும் மனம் தந்தையை நினைக் கட்டும் என பாபா புரிய வைத்துள்ளார். இப்போது ஆத்மாக்களாகிய நீங்கள் பரமாத்மாவிடம் அன்பு வைக்க வேண்டும் என்றால் அவரைத் தான் நினைக்க வேண்டும் அல்லவா? நாம் தேவி தேவதையாக மாற வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும் என்பதே உங்களுடைய குறிக்கோள். மாயை நிச்சயமாக ஏமாற்றும். தன்னை அதனிடமிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் மாட்டிக் கொண்டு இறப்பீர்கள். பிறகு நிந்தனையும் ஏற்படும். நஷ்டமும் நிறைய ஏற்படும்.

ஆத்மாக்களாகிய நாம் பிந்துவாக இருக்கிறோம், நம்முடைய தந்தை விதை ரூபமாக ஞானம் நிறைந்தவராக இருக்கிறார் என குழந்தைகளாகிய நீங்கள் அறிகிறீர்கள். இது மிகவும் அதிசயமான விஷயம் ஆகும். ஆத்மா என்றால் என்ன? அதில் எப்படி அழிவற்ற பாகம் நிரம்பி இருக்கிறது? இந்த ஆழமான விஷயங்களை நல்ல நல்ல குழந்தைகள் கூட முழுமையாகப் புரிந்துக் கொள்ள வில்லை. தன்னை யதார்த்தமாக ஆத்மா என புரிந்துக் கொண்டு பாபாவையும் பிந்து என புரிந்துக் கொண்டு நினைக்க வேண்டும். அவர் ஞானக்கடல். விதை ரூபம்...... இவ்வாறு புரிந்துக் கொண்டு நினைக்க கஷ்டப்படுகிறார்கள். மேலோட்டமாக இல்லாமல் இதில் நுணுக்கமான புத்தியோடு வேலை செய்ய வேண்டும். நாம் ஆத்மா, நம்முடைய தந்தை வந்திருக்கிறார். அவர் விதை ரூபம், ஞானக்கடல் நமக்கு ஞானம் கூறிக் கொண்டிருக் கின்றார். சிறிய ஆத்மாவாகிய நான் தான் தாரணை செய்ய வேண்டும். ஆத்மா மற்றும் பரமாத்மா...... என மேலோட்டமாக நிறைய பேர் கூறி விடுகிறார்கள். ஆனால் யதார்த்தமாக புத்தியில் புரிந்துக் கொள்வதில்லை. ஒன்றுமில்லாததற்கு மேலோட்டமாக நினைப்பது கூட சரியே, ஆனால் உண்மையாக புரிந்துக் கொண்டு நினைக்கும் போது அதிகப்படியான பலன் கிடைக்கிறது. அவர்கள் இவ்வளவு உயர்ந்த பதவி பெற முடியாது. இதில் மிகவும் கடினமான முயற்சி வேண்டும். நான் ஆத்மா மிகச் சிறிய பிந்துவாக இருக்கிறேன். பாபாவும் கூட இவ்வளவு சிறிய பிந்துவாக இருக்கிறார். அவருக்குள் அனைத்து ஞானமும் இருக்கிறது. இது கூட இங்கே நீங்கள் அமர்ந்திருக்கும் போது தான் சிறிது புத்தியில் தோன்றுகிறது. ஆனால் போகும் போதும் வரும் போதும் இந்த சிந்தனை இருக்கிறதா என்றால் இல்லை. மறந்து போகிறார்கள். முழு நாளும் இதே சிந்தனை இருக்க வேண்டும். இதுவே உண்மையிலும் உண்மையான நினைவாகும். நாம் எவ்வாறு நினைக்கிறோம் என சிலர் உண்மையைக் கூறுவ தில்லை. சார்ட் அனுப்புகிறார்கள். ஆனால் தன்னை பிந்து என புரிந்துக் கொண்டு தந்தையையும் பிந்து ரூபத்தில் நினைக்கிறேன் என்று எழுதுவதில்லை. உண்மையாக முழுவதும் எழுதுவ தில்லை. மிக நன்றாக முரளி வகுப்பு நடத்துபவர்கள் கூட யோகா மிகக் குறைவாகவே செய்கின்றனர். தேக உணர்வு நிறைய இருக்கின்றது. இந்த குப்த விஷயத்தை முழுமையாகப் புரிந்துக் கொள்வதில்லை. நினைப்பதும் இல்லை. நினைவினால் தான் தூய்மையாக முடியும். முதலில் கர்மாதீத நிலையை அடைய வேண்டும் அல்லவா? அவர்களே உயர்ந்த பதவி அடைவார்கள். மற்றபடி முரளி வாசிக்கக் கூடியவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால் யோகத்தில் இருக்க முடியவதில்லை என பாபா அறிகிறார். உலகத்திற்கு அதிபதியாவது என்பது சித்தி வீடு போன்று கிடையாது. அவர்கள் அல்ப கால பதவியை அடைவதற்காக எவ்வளவு படிக்கிறார்கள். வருமானத்திற்கு மூலதனம் இப்போது கிடைத்திருக்கிறது. முன்பு வக்கீல் போன்றோர் இவ்வளவு சம்பாதிக்கவில்லை.

இப்போது எவ்வளவு சம்பாதிக்கிறார்கள். குழந்தைகள் தனக்கு நன்மை செய்து கொள்வதற்காக தன்னை ஆத்மா என உணர்ந்துக் கொண்டு நன்கு தந்தையை நினைக்க வேண்டும். மேலும் திரிமூர்த்தி சிவனின் அறிமுகத்தை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். சிவன் என்று கூறுவதால் மட்டும் புரிந்துக் கொள்ள மாட்டார்கள். திரிமூர்த்தி என நிச்சயம் எழுத வேண்டும். திரிமூர்த்தி மற்றும் மரம் இரண்டு படங்களுமே முக்கியமானவை. ஏணி படத்தை விட மரத்தில் அதிக ஞானம் இருக்கிறது. இந்த சித்திரங்கள் அனைவரிடமும் இருக்க வேண்டும். ஒரு புறம் திரிமூர்த்தி, நாடக சக்கரம். இன்னொரு புறம் மரம். இந்த பாண்டவ சேனையின் கொடி இருக்க வேண்டும். நாடகம் மற்றும் மரத்தின் ஞானம் கூட தந்தை கொடுக்கிறார். லஷ்மி நாராயணன், விஷ்ணு போன்றோர் யார்? இதை யாரும் புரிந்துக் கொள்ளவில்லை. மகாலஷ்மி பூஜை செய்கிறார்கள். லஷ்மி வருவாள் என நினைக்கிறார்கள். இப்போது லஷ்மிக்கு செல்வம் எங்கிருந்து வரும்? நான்கு புஜங்களை உடையவர், 8 புஜங்களை உடையவர் என எத்தனை படங்களை உருவாக்கி இருக்கிறார்கள். எதையும் புரிந்துக் கொள்ள வில்லை. 8-10 புஜங்களை உடைய மனிதர்கள் யாரும் கிடையாது. யாருக்கு என்ன தோன்றியதோ அதைச் செய்துள்ளனர். அவ்வளவு தான் நடந்துக் கொண்டிருக்கிறது. அனுமானின் பூஜை செய்யுங் கள் என யாரோ வழியில் கூறினார். அவ்வளவு தான், உடனே அதன்படி நடக்கின்றனர். சஞ்ஜீவினி மூலிகை எடுத்து வந்தார்...... என காண்பிக்கிறார்கள். அதன் பொருளை குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துக் கொள்கிறீர்கள். சஞ்ஜீவினி மூலிகை என்பது மன்மனாபவ மந்திரம் ஆகும். சிந்தித்துப் பார்த்தால் எது வரை பிராமணன் ஆகவில்லையோ, பாபாவின் அறிமுகம் கிடைக்கவில்லையோ அதுவரை ஒரு நயா பைசா மதிப்பும் இல்லை. பதவியை வைத்து மனிதர் களுக்கு எவ்வளவு அபிமானம் இருக்கின்றது. அவர்களுக்குப் புரிய வைப்பதில் மிகவும் கஷ்டம் இருக்கிறது. இராஜ்யத்தை உருவாக்குவதில் எவ்வளவு கஷ்டம் இருக்கிறது அது உடல் வலிமையாகும். இது யோக வலிமையாகும். இந்த விஷயங்கள் சாஸ்திரங்களில் இல்லை. உண்மையில் நீங்கள் எந்த சாஸ்திரத்தையும் குறிப்பெடுக்கத் தேவை இல்லை. நீங்கள் சாஸ்திரங்களை ஏற்றுக் கொள்கிறீர் களா என ஒரு வேளை கேட்டால் ஆம், இது அனைத்தும் பக்தி மார்க்கத்தினுடையது என கூறுங்கள். இப்போது நாங்கள் ஞான வழியில் சென்றுக் கொண்டிருக்கின்றோம். ஞானத்தைக் கொடுக்கக் கூடியவர் ஞானக் கடல் ஒரே ஒரு தந்தை தான். இதற்கு ஆன்மீக ஞானம் என்று பெயர். பரமாத்மா வந்து ஆத்மாக்களுக்கு ஞானம் கொடுக்கின்றார். அந்த மனிதர்கள் மனிதர் களுக்கு கொடுக்கிறார்கள். மனிதர்கள் ஒரு போதும் ஆன்மீக ஞானத்தைக் கொடுக்க முடியாது. ஞானக் கடல், பதீத பாவனர், லிபரேட்டர் சத்கதியை அளிக்கக் கூடிய வள்ளல் ஒரேயொரு தந்தை தான்.

இது இது செய்யுங்கள் என பாபா தான் புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். சிவஜெயந்தி அன்று எவ்வளவு குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள் பாருங்கள். டிரான்ஸ்லைட் படம் சிறியதாக இருந்தாலும் அனைவருக்கும் கிடைக்கட்டும். உங்களுடையது முற்றிலும் புதிய விஷயம் ஆகும். வேறு யாரும் புரிந்துக் கொள்ள முடியாது. நிறைய செய்தித்தாளில் போட வேண்டும். குரல் எழுப்ப வேண்டும். இப்படி சென்டர்களை திறக்கக் கூடியவர்களும் வேண்டும். இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு இந்தளவிற்கு போதை ஏற்படவில்லை. வரிசைக்

கிரமத்தில் முயற்சிக்கு ஏற்ப புரிய வைக்கிறார்கள். இவ்வளவு பிரம்மா குமார், பிரம்மா குமாரிகள் இருக்கிறார்கள். நல்லது பிரம்மா வின் பெயரை எடுத்து விட்டு வேறு யாருடைய பெயரை வேண்டுமானாலும் போடுங்கள். இராதா கிருஷ்ணரின் பெயரைப் போடுங்கள். சரி, பிரம்மா குமார், பிரம்மா குமாரிகள் எங்கிருந்து வருவார்கள். வாய் வழி வம்சம் பி.கே என்றால் யாராவது பிரம்மா வேண்டும் அல்லவா. குழந்தைகள் போகப் போக நிறைய புரிந்துக் கொள்வார்கள். செலவு செய்து தான் ஆக வேண்டும். படங்களில் மிகத் தெளிவாக இருக்கிறது. லஷ்மி நாராயணனின் படம் மிக நன்றாக இருக்கிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட, செல்லமான சேவை செய்யக் கூடிய, கட்டளைக்குக் கீழ் படிந்த, உண்மையுள்ள, வரிசைக் கிரமத்தில் முயற்சிக்கு ஏற்ப குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. கர்மாதீத் ஆவதற்கு பாபாவை கூர்மையான புத்தியினால் புரிந்துக் கொண்டு உண்மையாக நினைக்க வேண்டும். படிப்பின் கூடவே யோகத்தில் முழு கவனம் வைக்க வேண்டும்.

2. தன்னை மாயாவின் ஏமாற்றத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும். யாருடைய தேகத்திலும் பற்று வைக்கக் கூடாது. உண்மையான அன்பு ஒரு பாபாவிடம் தான் வைக்க வேண்டும். தேக உணர்வில் வரக் கூடாது.

வரதானம் : பிரம்ம முகூர்த்த நேரத்தில் வரதானம் கொடுக்கும் மற்றும் தானம் கொடுக்கும் பாபாவிற்கு சமமான வரதானி மற்றும் மகாதானி ஆகுக!

பிரம்ம முகூர்த்த சமயத்தில் விசே^மாக பிரம்மலோகத்து நிவாசி பாபா ஞான சூரியனின் ஒளி மற்றும் சக்தியின் கிரணங்களை குழந்தைகளுக்கு வரதான ரூபத்தில் வழங்குகிறார். கூடகூடவே பிரம்மா பாபா பாக்கிய விதாதாவின் ரூபத்தில் பாக்கியம் என்ற அமிர்தத்தை பகிர்ந்தளிக்கின்றார், புத்தி என்ற கலசம் வெறும் அந்த அமிர்தத்தை தாரணை செய்யத் தகுதியாக இருக்கவேண்டும். எந்தவிதமான தடை மற்றும் சோதனைகளும் இராது, அப்பொழுது முழு நாளிற்கான உயர்ந்த ஸ்திதி மற்றும் செயல்களின் முகூர்த்தத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும். ஏனெனில் அமிர்த வேளையின் சூழ்நிலைதான் விருத்தியை மாற்றக்கூடியது. ஆகையால் இந்த சமயம் வரதானம் எடுத்து தானம் கொடுங்கள். அதாவது வரதானி மற்றும் மகாதானியாக ஆகுங்கள்.

சுலோகன்: கோபமுடையவர்களின் வேலை கோபம் கொள்வது மற்றும் உங்களின் வேலை அன்பைக் கொடுப்பதாகும் தனது சக்திசா-யான மனதின் மூலம் சக்தி கொடுக்கும் சேவை செய்யுங்கள்

தனது சக்திசாலி மனதின் மூலம் சகாஷ் கொடுப்பதற்கான சேவை செய்யுங்கள்

இப்பொழுது சுய நன்மைக்கான அப்படிப்பட்ட திட்டமிடுங்கள் அது உலக சேவைக்கு சக்தி

(சகாஷ்) தானாகவே கிடைத்துக்கொண்டே இருக்க வேண்டும். இப்போது ஊக்க உற்சாகத்தோடு தன் மனதில் நான் பாபாவுக்குச் சமமாக ஆகியே காட்டுவேன் இந்த உறுதிமொழியை உறுதி செய்யுங்கள். பிரம்மா பாபாவிற்கும் குழந்தைகள் மீது அளவு கடந்த அன்பு உள்ளது, எனவே ஒவ்வொரு குழந்தையையும் முன்னால் கொண்டு வந்து (எமர்ஜ்) விசேˆமாக சமமாகுவதற்கான சகாஷ் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்.

.